பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: புரட்டாசி 11 (27—9—72) புதன் வெளியூர்: புரட்டாசி 12 (28—9—72) வியாழன் [இதழ்: 87

தாழ்த்தப்பட்டவருக்குக் கொடுமை— 17 பேர்கள் கைது

கன்னியா, செப். 27—

பொதுக் கிணறு ஒன்றிலிருந்து குடிநீர் எடுத்ததற்காகத் தாழ்த்தப்பட்ட குடிமகன் ஒருவரை அங்குள்ள கிராம மக்கள் தண்டித்தது தொடர்பாக 17 பேர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

அந்தத் தாழ்த்தப்பட்ட குடிமகனிடமிருந்து ரூ. 72 அபராதத் தொகை வசூலிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வங்க தேசத்தில் ஊழல்-ஒழுங்கீனம்

ஆளும் கட்சியில் களையெடுப்பு

முஜிபுர் ரகிமானின் தீவிர நடவடிக்கை

டாக்கா, செப். 27—

வெளிநாட்டில் அறுவைச்சிகிச்சை செய்துகொண்டு திரும்பிய வங்க தேசத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமான், ஊழல் — ஒழுங்கீனமாக நடந்ததாகக் கூறப்பட்ட பல கட்சி உறுப்பினர்களையும் பதவி நீக்கம் செய்திருக்கிறார்; இந்த உறுப்பினர்கள், அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களும் ஆவர்.

வங்க தேசத்தில் பணவீக்கமும் விலைவாசி உயர்வும் உச்ச கட்டத்தை எட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது; ஒரு கிலோ அரிசி ரூ. 3-க்கு விற்கப்படுகிறது; இதனால் மக்கள் மிகவும் அதிருப்தி அடைந்திருக்கின்றனர்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் இலஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாடுவதாக மக்கள் குற்றஞ்சாட்டத் தொடங்கினர்; எதிர்க் கட்சியினரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசைக் கடுமையாகத் தாக்கத் துவங்கினர்.

இந்தியாவுக்கு எதிரான பிரசாரமும் நடைபெற்று வருகிறது; பல பொருட்களும் இந்தியாவுக்குக் கள்ளக்கடத்தல் செய்யப்படுவதாலேயே விலைவாசி உயர்வதாக அவர்கள் கூறுகின்றனர்.

மௌலானா பாஷானி என்னும் சீன ஆதரவுத் தலைவர், அரசைத் தாக்குவதில் முன்னணியில் இருக்கிறார்; சுதந்தரப் போராட்டத்தின்போது அவர், ஆளுங்கட்சியான அவாமி கட்சிக்கு ஆதரவாகவே இருந்தார்; பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு அஞ்சி அவர் இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்தார்; சில மாதங்களுக்கு முன்னர்தான் அவர் வங்க தேசம் திரும்பினார்; அன்றிலிருந்து அவர் இந்தியாவைத் தாக்கத் துவங்கியிருக்கிறார்.

கட்சியைத் தூய்மைப்படுத்துவதற்காக முஜிபுர் ரகிமான் மேலும் சில நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இன்று மாலை முதல் கூடவிருக்கும் அவாமி கட்சியின் கூட்டத்தில் இதுகுறித்த முடிவு எடுக்கப்படும் என்று கருதப்படுகிறது.

சணல் கலந்த புதிய ரகத் துணி

வங்க தேசத்தில் உற்பத்தி

சணலையும் — பருத்தி நூலையும் பயன்படுத்திப் புதிய ரகத் துணி ஒன்றை வங்க தேச நிபுணர்கள் உருவாக்கியிருக்கின்றனர்.

இத்துணிக்கு 'ஜூட்டன்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இத்துணியில் 30 சதவிகிதம் சணலும் — 70 சதவிகிதம் பருத்தியும் பயன்படுத்தப்படுகின்றனவாம்.

இதேபோன்று ஜமக்காளங்களும் நெய்யப்படுகின்றனவாம்; இதில் 85 சதவிகித சணலும்— 15 சதவிகிதம் கம்பளி நூலும் பயன்படுத்தப்படுகின்றனவாம்.

இத்தகவலை வெளியிட்ட வங்க தேச அமைச்சர் மொபிஸ் சௌதரி மலிவான விலையில் துணிகளை உற்பத்தி செய்ய மேலும் சணலைப் பயன்படுத்த முடியும் என்று கருதப்படுவதாகத் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவில்லை

ஊழல் — ஒழுங்கீனங்கள் — வேண்டியவர்களுக்குச் சலுகை

★

அச்சுத மேனன் அரசுமீது குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், செப். 27—

கேரள அரசுமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம்மீது விவாதம் நடைபெற்று வருகிறது.

ஆளும் கூட்டணிக் கட்சிகளிடையே ஒற்றுமை இல்லை என்றும், ஒவ்வொன்றும் முரண்பாடான கொள்கைகளைக் கூறிவருகிறதென்றும் எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டின.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தத் தவறியதாகவும், மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஊழலும் — ஒழுங்கீனமும் எங்கும் தலைவிரித்தாடுவதாகவும் வேண்டியவர்கட்குச் சலுகை காட்டப்படுவதாகவும் எதிர்க் கட்சியினரின் குற்றச்சாட்டுக்களாகும்.

குற்றச்சாட்டுக்களை, ஆளும் கூட்டணிக் கட்சியினர் மறுத்தனர்.

கடந்த 18 மாத காலத்தில், இந்த அமைச்சரவைமீது கொண்டு வரப்படும் மூன்றாவது நம்பிக்கையில்லாத் தீர்மானமாகும் இது என்றும், சட்டமன்றத்தில் எவ்வளவோ முக்கிய மசோதாக்கள் கொண்டுவரப்பட வேண்டியிருக்கும்போது எதிர்க் கட்சியினர் காலத்தைப் பாழ்படுத்துகிறார்கள் என்றும் ஆளும் கட்சியினர் எடுத்துரைத்தனர்.

வட்டார மக்களுக்கு முன்னுரிமை

மற்ற மாநிலங்களுக்கு இல்லையா?

பெங்களூர் செப். 27—

மைசூர் மாநிலத்தில் உள்ள மத்திய அரசு நிறுவனங்களில் வேலைக்கு ஆட்கள் எடுக்கப்படும்போது 'மைசூர்க்காரர்'களுக்கு முன்னுரிமை அளிக்கும்படி அந்த நிறுவனங்களுக்கு மத்திய அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது.

இந்தச் சுற்றறிக்கையை ஒழுங்காக நிறைவேற்றும்படி மேற்படி நிறுவனங்களை மைசூர் அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது.

"இந்த நிறுவனங்களில் ஊழியர் நியமனத்தில் மைசூர்க்காரர்களுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும்; மாதம் ரூ. 400-க்குமேல் ஊதியம் அளிக்கப்படும் வேலைகளுக்கு இந்த உத்தரவிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது; இந்த முன்னுரிமைச் சலுகையைப் பயன்படுத்திக்கொண்டு வேலைபெறுபவர்கள் மட்டுமின்றி அவர்களது பெற்றோர்களும் மைசூர்க்காரர்களாக இருக்க வேண்டும்; அதாவது மைசூர் மாநிலத்தில் பிறந்தவர்களாகவோ அல்லது மைசூர் மாநிலத்திலேயே வாழ்பவர்களாகவோ இருக்கவேண்டும்"

என்றெல்லாம் மத்திய அரசின் சுற்றறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

'தேசியப் பறவை' உருவாக்கிய பிரச்சினை

சூரத், செப். 27—

இந்தியாவின் தேசியப் பறவையான மயில், 'புவா' என்ற கிராமத்தின் மக்களுக்கு ஒரு பிரச்சினையாக உருவாகியிருக்கிறது.

சுமார் 10 ஆண்டுகளுக்குமுன், அந்தக் கிராமத்தின் ஜமீன்தாரரான சையத் ஐதர் சாகிப் என்பவர், ஒரு சோடி மயில்களைக் கொண்டுவந்தார்; அவை இப்போது பல்கிப் பெருகி 400 ஆக வளர்ந்துவிட்டிருக்கின்றன.

இந்த மயில்கள், கிராமப் பயிர்களைச் சேதப்படுத்தி வருகின்றனவாம்.

மயில் இந்தியாவின் தேசியப் பறவையாகையால் அவைகளைக் கொல்லவும் முடியாமல் அக்கிராம மக்கள் சிரமப்படுகின்றனராம்!

நரசப்பூர் ஆசிரியர்களுக்கு ஊதியம்

ஒன்றரை மாதக் கிளர்ச்சிக்குப் பின் நகராட்சியின் முடிவு

விசயவாடா, செப். 25—

நரசப்பூர் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கடந்த ஆறு மாத காலமாகச் சம்பளம் வழங்கப்படாததனால் அவர்கள் கடந்த ஒன்றரை மாதத்துக்கு மேலாக வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள் அல்லவா?

அவர்களுக்கு இப்போது சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

கடைகள் கட்டி வாடகைக்கு விடுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதியை இந்த ஆசிரியர்களுக்கு ஊதியமாக வழங்கப் பயன்படுத்த, மாவட்ட அதிகாரிகளும்— நகராட்சியும் முடிவு செய்திருக்கின்றனராம்.

ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் காரணமாக சுமார் 5000 மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது; சம்பளம் கிடைக்காததனால் ஆசிரியர்களும் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

காங்கிரசு எம்.எல்.ஏ.-க்களிடம் பேரம்

மேற்கு வங்க அரசைக் கவிழ்க்க முயற்சி?

முதலமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே குற்றச்சாட்டு

கல்கத்தா, செப். 27—

"சில டணக்காரர்களும்—தொழிலதிபர்களும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி அரசைக் கவிழ்க்கச் சதி செய்கிறார்கள்; ஆனால் அவர்கள் அதில் வெற்றிபெறப் போவதில்லை; ஏனெனில், காங்கிரசுச் சட்டமன்ற உறுப்பினர்கள் விலை பொருள்களோ— அழகுப் பொருட்களோ அல்லர்; மக்களின் பிரதிநிதிகளான அவர்கள் சோஷலிச சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுபவர்களாவர்"

என்று, மேற்கு வங்க முதலமைச்சர் சித்தார்த்த சங்கர் ரே, இங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

முதலமைச்சருடையவும் — காங்கிரசுக் கட்சியினுடையவும் முன்னேற்றத் திட்டங்களை எதிர்த்து வரும் சக்திகளுக்கு எதிராக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாம்.

கைதான ஆசிரியர்கள் விடுதலை

பாட்னா, செப். 27—

பீகாரில் கிளர்ச்சியில் ஈடுபட்டதையொட்டிக் கைது செய்யப்பட்ட 7,500 ஆசிரியர்களையும் விடுதலை செய்ய மாநில அரசு உத்தரவிட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் மீதான வழக்குகளும் திரும்பப் பெறப்படுகின்றன.

இந்திய ஊழியர்கள் வேலை இழப்பு

அமெரிக்க நிறுவனத்தின் நடவடிக்கை

புதுடில்லி, செப். 27—

இந்தியாவில் உள்ள அமெரிக்க உதவி நிறுவன அலுவலகத்தில் பணியாற்றும் இந்திய ஊழியர்களின் எண்ணிக்கை 700-லிருந்து 157 ஆகக் குறைக்கப்படும்; 1973 சனவரிவாக்கில் அதில் 50 அமெரிக்க ஊழியர்கள் இருப்பார்கள்.

1966-ல் இந்த நிறுவனத்தில் 1000 இந்திய ஊழியர்கள் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பூட்டோ கட்சியில் பிளவு

பாகிஸ்தான் அதிபர் பூட்டோவின் கட்சியில் பிளவு ஏற்பட்டு வருவதாக நோக்கர்கள் கருதுகின்றனர்.

பாகிஸ்தான் சட்ட அமைச்சர் மியான் முகமது அலி கசூரி என்பவர் இராஜினாமா செய்துவிட்டதாகவும், கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதற்கான அறிகுறியே இது என்றும் கூறப்படுகிறது.

பயிற்சி பெறும் டாக்டர்கள் கிளர்ச்சி

ஐதராபாத், செப். 27—

ஆந்திரமாநிலத்திலுள்ள பயிற்சி பெறும் டாக்டர்களும்— பட்டப் பிற்காலப் படிப்பு மருத்துவ மாணவர்களும் சுமார் 1,000 பேர் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ஊதிய உயர்வு உட்பட நான்கு கோரிக்கைகளை இவர்கள் எழுப்பியிருக்கின்றனர்.

ஆயினும் பெரிய மருத்துவமனைகளில் எல்லாம் வழக்கமாக வேலைகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

பேரறிஞர் அண்ணாவினால் தமிழகத்தின் பெருமை உயர்ந்தது

அவர் புகழைக் குறைக்க முயன்றவர்கள் வீழ்ந்தார்கள்

காமராசர் பேச்சால் கழகம் அழிந்திடாது

அண்ணா பிறந்த நாள் விழாவில் நாவலர் முழக்கம்

காஞ்சிபுரம், செப். 25—

"தமிழகத்தில் சட்டமில்லை -- அமைதியில்லை" என்று முதுகுளத்தூரில் 38 பிணங்களைச் சுட்டு வீழ்த்திய காமராசர் கட்சியா பேசுவது ?

"எந்தத் துறையை வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு, காங்கிரசு ஆட்சி 20 ஆண்டுக் காலம் செய்த சாதனைகளையும், கழகம் பொறுப்பேற்று 4 ஆண்டுகளில் செய்த சாதனைகளையும் ஒப்பிட்டு வாதிட்டுப் பேசுவதற்குக் காமராசர் தயார்தானா? இங்கு ஊருக்கு ஊர் சென்று கழகத்தை இழித்தும் பழித்தும் பேசும் காமராசர் இதற்குத் தயார்தானா?"

என்று கழகம் பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள், காஞ்சியில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

காஞ்சி 28-வது வட்டத்தில் சிறப்பானதோர் கூட்டத்தைக் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

10 இணைகட்குக் கோவிலில் திருமணம் நடத்திவைக்கப்பட்டது.

வட்டச் செயலாளர் சீனுவாசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் டி. கே. எஸ். மணி, சட்டமன்ற உறுப்பினர் சி. வி. எம். அண்ணாமலை, மேலவை உறுப்பினர் சி.வி. இராசகோபால் மற்றும் பலர் உரையாற்றினர்.

கழகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த 28-வது வட்ட முன்னணித் தோழர் திருவேங்கடம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

பொதுச்செயலாளர் நாவலர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

"அரசியலில் நாகரிகம் -- பண்பாடு வளர்க்கும் குறிக்கோளுடன் பணியாற்றி அதில் வெற்றி பெற்றவர் அண்ணா.

அறிஞர் அண்ணாவைப் பார்த்து, 'அறிவு உண்டா?' எனக் கேட்டவர் காமராசர்!

அரசியல் படித்து -- பொருளாதாரத்தைப் பாடமாக எடுத்துக் கல்லூரியில் தங்கப் பதக்கமும் பெற்ற அண்ணாவைப் பார்த்துக் காமராசர், 'அண்ணாதுரைக்கு அறிவு உண்டா?' என்று கேட்டார்.

அண்ணாவை இழித்தும் பழித்தும் பேசியவர்கள்தான் வீழ்ந்தார்களே தவிர, அண்ணாவின் புகழை -- வளர்ச்சியை அவர்களால தடுக்க முடியவில்லை!

அண்ணா அரசியலுக்கு வந்த பிறகுதான், தமிழில் மாற்றம் -- 30 ஆண்டுகளில் பெற்றோம்!

நாங்களே பல முறை அண்ணாவிடம் வாதிடுவோம்; என்றாலும், ஒரு கட்டத்தில் எங்களைத் திக்குமுக்காட செய்து அவரே இறுதியில் வென்று நிற்பார்; வாதிட்டு முடிவுக்கு வரும் தன்மை அண்ணாவிடம் உண்டு.

அண்ணாவுக்கும் -- கழகத் தோழர்களுக்கும் அப்படிப்பட்ட உணர்வு பாசம் இருந்தது.

ஆனால் மற்றக் கட்சிகளை எடுத்துப் பார்த்தால், தலைவரைப் பார்த்தால் பயந்து -- அஞ்சி ஒடுங்கி நடப்பார்கள்; 8 அடி தள்ளி நின்று பேச வேண்டும்; சமநிலையில் நின்று மதிப்புக் கொடுத்து ஒன்றாகப் பாவித்து பேசும் நிலை கிடையாது.

தி. மு. கழகத்தில், 'தலைவன் -- தொண்டன்' என்ற பாகுபாடு கிடையாது; அண்ணன் -- தம்பி என்ற பாச உணர்வு முறைதான் உண்டு.

தலைவர் வருகிறார் என்றால், அவர் முன் குனிந்து வரவேண்டும் -- எதிரே உட்காரக் கூடாது -- தள்ளி உட்கார வேண்டும் என்ற வேறுபாடு எல்லாம் அண்ணாவிடம் பார்க்க முடியாது.

கழகத்தில்தான், பந்தம் -- பாசம் -- பற்று -- உறவு -- அண்ணன் தம்பி குடும்பப் பாசம் என்ற உறவு உண்டு; வேறு எங்கேயும் இந்நிலையை காண முடியாது; அத்தகைய உறவை உண்டாக்கியவர் பேரறிஞர் அண்ணா.

அண்ணா அவர்கள், எளிதில் எதிலும் ஒரு முடிவுக்கு வரமாட்டார் -- நாங்கள் அவசரப்படுவோம்.

கழகத்தில் நான் கொஞ்சம் பொறுமையாக இருப்பவன்; நானே பொறுமை இழக்கும் அளவுக்கு அண்ணா பொறுமையாகப் போவார்!

ஆனால், அப்படி அவர் பொறுமையோடு எடுத்துவைக்கும் அடியிலிருந்து பின்வாங்கமாட்டார்; எடுத்த முடிவிலும் வென்று காட்டுவார்; அந்த ஆற்றல் காரணமாக, அசையாத -- ஆதிக்க அதிகார பலமும், பத்திரிகை பலமும் கொண்ட ஆட்சியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நிலையான -- ஆடாத -- அசையாத கழக அரசை அமைத்தார்!

கழகம், தொடக்கக் கட்டத்தில் எப்படி இருந்தாலும், 10 -- 12 ஆண்டு வளர்ச்சிக்குப் பிறகு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் -- கட்டுப்பாட்டுடன் இருக்கவேண்டும்; ஏணியின் முதற் படிக்கட்டில் ஏறும்போது இலேசாக -- அலட்சியமாக ஏறலாம்; ஆனால், ஏணியின் படிக்கட்டின் உச்சிக்குப் போகும் போது கவனம் அதிகம் தேவை; அலட்சியம் காட்டினால் ஏணியும் கீழே விழும் -- ஏறும் ஆளும் கீழே விழுவான்.

ஆகவே, ஏணியின் உயரே ஏறி உள்ள நாம் மிக எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் -- நடக்க வேண்டும்.

நாம், நம் வளர்ச்சிக்கு ஏற்ற மாதிரி கட்டுப்பாடுடன் பேச வேண்டும்.

இந்த உணர்ச்சியை, வளர்ந்துவிட்ட நிலையில் உள்ள கழகம் அந்த அளவு பொறுப்புடன் கழகத் தோழர்கள் கட்டுப்பாட்டுடன் பேச வேண்டும் -- நடக்க வேண்டும்.

அண்ணாவின் நூல்களைப் படித்து மாணவர்கள் நுகர வேண்டும்.

மதிப்புக்குரிய காமராசர் முதல்வராக இருந்த 9 ஆண்டுக் காலத்தில் ஒருநாள்கூட சட்டமன்றத்தில் எழுந்து பேசியதில்லை; அவர் வீரர்; இன்றைக்கு முச்சந்திக்கு முச்சந்தி பேசி வருகிறார்; அண்ணாவையும் கழகத்தையும் இழித்துப் பழித்துப் பேசும் ஆற்றல் தமக்கு இருப்பதாக அவர் நினைத்துப் பேசுகிறார்.

முதலமைச்சரைப் பார்த்துக் காங்கிரசு ஆட்சியில் கேட்ட எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்குச் சுப்பிரமணியமும் -- பக்தவத்சலமும் பதில் சொன்னதுண்டே தவிர, காமராசர் எழுந்து நின்று ஒரு பதில் சொன்னதில்லை!

முதலமைச்சராக, கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டிய சட்டத்தைப் பக்தவத்சலம்தான் நிறைவேற்றுவார்.

காமராசர், தமது 9 ஆண்டு முதலமைச்சர் காலத்தில் ஒரு மசோதாவை விளக்கிப் பேசினார் என்ற நிலை உண்டா? ஒரு தீர்மானத்தையாவது விளக்கியதுண்டா? அல்லது கேள்விக்குப் பதில் சொல்லியதுண்டா?

அப்படிப்பட்ட காமராசர், இன்று எங்கே இருக்கிறார் என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்!

4 ஆண்டுக் காலம் கழகம் ஆண்ட பிறகு -- எனது உயரம் அளவுக்குச் சுவரொட்டி அடித்து, 'தி. மு. கழக ஆட்சியில் இலஞ்சம் -- ஊழல்' என்று சொன்ன பிறகு, இராஜாஜியின் கட்சிக்கு 6 இடத்தைத்தான் தமிழகம் தந்தது!

காமராசர் சமீபத்தில் பேசியிருக்கிறார் -- தி. மு. க.-வினர் ரௌடிகள் என்று.

அப்படிப் பேசுவதுதான் அரசியல் நாகரிகமா? அவர் தனது ஆற்றலை நம்பியா பேசுகிறார்? இல்லை; ஏதோ பேச வேண்டும் என்று எதையாவது பேசுகிறார்!

கழகத்திற்கு என்று பெயரும் புகழும் உண்டு; அதை அழிக்கக் காமராசர் முயன்றாலும் அது மங்காது -- மறையாது! குன்றாது -- குறையாது!

தோல்விக்காக அண்ணா முக்காடிட்டு மௌனியாக அமர்ந்தவருமல்லர் -- வெற்றிக்காக வெறி பிடித்து அலைந்தவருமல்லர்!"

புதிய சீரணித் தலைவர்கள்

சென்னைத் தொகுதிகளுக்கு நியமனம்

அமைச்சர் என். வி. நடராசன் அறிவிப்பு

சென்னை, செப். 26—

சென்னை நகருக்கும் புதிய சீரணித் தலைவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்; இதன் தொடர்பாக அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"14—9—72 தேதியிட்ட அரசு ஆணை எண் 1916-ல் குறிப்பிட்டுள்ளபடி, கீழ்க்கண்டவர்கள் சென்னை நகருக்குத் தொகுதி சீரணித் தலைவர்களாக அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

புதியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் அரசால் இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

முன்பு இருந்த சீரணித் தொகுதித் தலைவர்கள், கடந்த ஐந்தாண்டுக் காலமாகச் சென்னை நகரில் சீரணிப் பணியை நல்ல முறையில், தொண்டர்கள் -- பொதுமக்கள் ஒத்துழைப்புடன் பணிபுரிந்து வந்தனர்; அதற்காகத் தமிழக அரசு சார்பில் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற சீரணித் தொகுதித் தலைவர்களும், தொண்டர்களின் ஒத்துழைப்புடனும் -- பொதுமக்களின் உதவியுடனும் நல்ல முறையில் பணியாற்றி -- சீரணி கண்ட செம்மல் பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்தை முழுமையாக நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

சீரணித் தொகுதித் தலைவர்களும் பொதுமக்களும் பேராதரவினை நல்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

புதிய தலைவர்களும் -- தொகுதிகளும் வருமாறு:—

மு. பாண்டியன் —வண்ணாரப்பேட்டை
இலட்சுமிபதி எம்.சி. —துறைமுகம்
மா. ரா. ஏழுமலை —பேசின்பிரிட்ஜ்
கு. மா. மணி—பூங்காநகர்
கே. பக்தவத்சலு—பெரம்பூர்
கோ. சிட்டிபாபு —புரசைவாக்கம்
ஓ. எஸ். பாலசுந்தரம்—எழும்பூர்
நெடுஞ்செழியன் —ஆயிரம் விளக்கு
சதாசிவம்—திருவல்லிக்கேணி
அ. ச. சங்கரன் எம்.சி. —மைலாப்பூர்
எம். எஸ் நம்பி—தியாகராயநகர்
சா. கணேசன் —சைதாப்பேட்டை

இந்தோனேசியாவுக்கு ரூ. 1.65 கோடி மதிப்புள்ள சைக்கிள்கள் ஏற்றுமதி

புதுடில்லி, செப். 26—

இந்தியாவிலிருந்து இந்தோனேசிய நாட்டுக்கு 1,11,000 சைக்கிள்கள் அனுப்பப்படும்.

இதன் மதிப்பு, ரூ. 1.65 கோடியாகும்.

மாமல்லபுரத்தில் ஒலி--ஒளிக் கண்காட்சி

அமைக்கப்படும் இடத்தை அமைச்சர் பார்வையிட்டார்

சென்னை, செப். 26—

மாமல்லபுரத்தில் ஒலி -- ஒளிக் காட்சி அமைக்கப்படும் இடத்தை மத்திய அமைச்சர் கரன் சிங் பார்வையிட்டார்.

ரூ. 25 இலட்சம் செலவில் அமைக்கப்படும் ஒலி -- ஒளிக் காட்சி பற்றி அவர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பஞ்ச பாண்டவர் இரதங்கள் இருக்கும் இடத்தில்தான் ஒலி -- ஒளிக் காட்சி அமைக்கப்படுகிறது; இந்த இடத்தையும் மத்திய அமைச்சர் பார்வையிட்டார்; அதுபோது அவர், '1974-ம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் ஒலி -- ஒளிக் காட்சி அமைக்கப்பட்டுவிடும்' என்று குறிப்பிட்டார்.

அதே திட்டத்தில், கடற்கரைக் கோவிலைச் சுற்றியும் மின்விளக்கு அலங்காரம் செய்யப்படும்.

தாழ்த்தப்பட்ட - மலைசாதி மக்களுக்கு புதிய சலுகை

வேலைவாய்ப்பில் அதிக இடம் ஒதுக்க முடிவு

புதுடில்லி, செப். 27—

உயர் நிர்வாகம் பதவிகளில் தாழ்த்தப்பட்டவர்களும் -- மலைசாதியினரும் மிகக் குறைந்த அளவில் இருந்துவருவது குறித்து மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழு நேற்று நீண்டநேரம் விவாதித்ததாகத் தெரியவருகிறது.

இந்த நிலையை மாற்றுவதற்கும் பல நடவடிக்கைகளை எடுக்கவும் குழு தீர்மானித்ததாகக் கூறப்படுகிறது.

இப்போது இருந்துவரும் தாழ்த்தப்பட்டவர்களின் 12.5 சதவிகித 'கோட்டா'வை 15 சதவிகிதமாகவும், 5 சதவிகிதமாக இருந்துவரும் மலைசாதியினர் 'கோட்டா'வை 7.5 சதவிகிதமாக உயர்த்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட கோட்டாவைவிட அரசு அலுவல்களில் குறைவாக இருந்துவருவதற்குக் காரணம் கல்வி வாய்ப்பு இல்லாமையே என்பதனால், இது குறித்தும் நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

1964-ம் ஆண்டு கணக்குப்படி, மத்திய அரசு அலுவலர்களில் 1.54 சதவிகிதத்தினர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்களாவர்; 1969-ல் இது 2.29 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது; மலைசாதியினர் 0.22 சதவிகிதமாக இருந்தது 0.35 சதவிகிதமாக உயர்ந்தது.

கிளர்ச்சி எனும் புலியால் அதிர்ச்சி அடையமாட்டோம்

அரசைக் கவிழ்க்கச் சதிசெய்பவர்களை சந்திக்கத் தயார்

நிலப் பிரபுகட்கு ஆபத்து வந்ததும் காமராசர் பதறுவதேன்?

மதுரைப் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ப. உ. சண்முகம் முழக்கம்

மதுரை, செப். 26—

"உயிர் வாழும் ஒருவனுக்குப் பிழைக்க நிலம் – மானம் காக்கத் துணி – வயிறார சோறு – என்ற இலட்சியத்திற்கு அண்ணா உருவாக்கிய அரசு அயராது பாடுபடுகிறது! கலைஞர் அவர்கள் ஓயாது உழைக்கிறார்கள்!

"இதை அறியாமல் வேண்டுமென்றே சதி செய்கின்றவர்களைச் சந்திக்கத் தயார்! சந்திப்பு – துப்பாக்கி முனையில் அல்ல – கத்தியின் முனையில் அல்ல–அண்ணா சொன்ன கடமை – கண்ணியம் – கட்டுப்பாடு வழியில் சந்திக்கத் தயார்"

என்று அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், மதுரையில் நடந்த அண்ணா பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தோழர் திருப்பதி எம்.எல்.ஏ. தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் மேயர் எஸ் முத்து எம்.எல்.சி., கே. எஸ். சந்தானம் எம்.சி., துரை எழில் விழியன் மற்றும் பலர் பேசினர்.

திரு. ப. உ. சண்முகம் அவர்கள் மேலும் பேசியதாவது:—

"அண்ணாவின் இலட்சியம் 'இந்த நாட்டில் இறந்தவனுக்கு ஆறடி மண் கொடுக்கப்படும்போது, அவன் வாழ்கின்ற காலத்திலேயே ஆறடி மண் கொடுக்க வேண்டும்; ஆளுக்கு ஒரு வீடு—வயிறார சோறு—மானம் காக்கத் துணி தரப்பட வேண்டும்' என்பதேயாகும்; இதற்காகத்தான் அவர் அல்லும் பகலும் அயராது பாடுபட்டார்.

அவர் உருவாக்கிய ஆட்சியில், அவர் கண்ட கனவை நனவாக்க நம்மால் முடிந்த அளவிற்கு நல்ல காரியங்கள் பலவற்றை ஓயாது ஒழியாது செய்துவருகிறோம்!

இருந்தும் காமராசர், நம்மை அழித்துவிடலாம் --- ஒழித்துவிடலாம் என்று கருதி, 'போராட வாருங்கள்' என்று மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறார்!

இராசபாளையத்தில் அவர் பேசும்போது, 'பதவி போனால் இந்த மந்திரிகளெல்லாம் என்ன செய்வார்கள்' என்று கேட்டிருக்கிறார்; 'எத்தனை நாளைக்கு அவருடன் ஆட்சி' என்று வினவியிருக்கிறார்!

காமராசருக்குச் சொல்லிக்கொள்கிறேன் -- 'நாட்டு மக்கள் எவ்வளவு நாளைக்கு எங்களை விரும்புகிறார்களோ அவ்வளவு நாள் 'நாங்கள் பதவியில் இருப்போம்' என்று!

'கிளர்ச்சி' என்ற புலியால் அதிர்ச்சியடைந்துவிடுவோம் என்று கனவு காண்கிறார்! அது பலிக்காமல் போனதால் பதறுகிறார்!

'விவசாயிகள்' என்ற பெயராலே போராட்டத்தைத் துவக்கினார்; அநியாயமாக 14 பேர் கொல்லப்படுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்ததைத் தவிர, சிறு விவசாயிகட்கு அவரால் வேறு என்ன செய்ய முடிந்தது?

நாம் விவசாயிகளுக்குத் துரோகம் செய்துவிட்டோமென்று காமராசர் கூறுகிறார்! காரணம் -- அவருக்கு வேண்டிய மிராசுதாரர்கள் நம்முடைய ஆட்சியிலே பாதிக்கப்பட்டார்கள் என்பதுதான்!

காமராசர் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தார் -- 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று; அவருடைய சிஷ்யகோடி மன்றாடியார், 'இப்படி இத்தனை ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டுவந்துவிட்டீர்களே -- எனக்கோ 1,995 ஏக்கர் இருக்கிறது; காலஞ்சென்ற அர்ச்சுனன் துணைவியார் பார்வதிக்கு 1,755 ஏக்கர் இருக்கிறது; என்ன செய்வது' என்றார்.

உடனே காமராசர், 'பயப்படாதே' பால் பண்ணை என்ற பெயரால் வைத்துக் கொள்ளலாம் -- தப்பித்துக் கொள்ளலாம்' என்றார்; சட்டம் அவர்களைத் தொட முடியவில்லை!

வி. எஸ். தியாகராச முதலியார் என்ற நிலப்பிரபு, ஆவடி காங்கிரசு மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்; '7,000 ஏக்கர் வைத்திருக்கிறேனே என்ன செய்வது -- என் கதி என்ன' என்று காமராசரைக் கேட்டார்; 'பரவாயில்லை; கரும்பு பயிரிட விதிவிலக்கு' என்றார்; சட்டம் அங்கே ஒன்றும் செய்யவில்லை!

கருப்பையா மூப்பனாருக்கும் அதேபோல், 'டிரஸ்ட்' என்ற பெயரால் விதிவிலக்கு அளித்துள்ளார்! இந்த டிரஸ்டும், வேடிக்கையான டிரஸ்டாகும்! பூசை செய்வதற்காக மட்டும் 67 ஏக்கர் விதிவிலக்கு! கரும்பு -- பால் பண்ணைக்காக என்று விதிவிலக்கு!

ஆனால் நம்முடைய திட்டத்தால் -- சட்டத்தால் -- பதின்மூன்று பண முதலைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்!

முதலாளிக்காகச் சலுகைகள் பல அளித்தவர்தான் இன்று நம்மைப் பார்த்து, 'முதலாளிகட்கு ஆதரவாளர்கள்' என்று சொல்கிறார்! காரணம், நாம் போட்ட சட்டம் அவருடைய நண்பர்களைப் பாதித்திருப்பதுதான்!

அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், முதலாளிகளின் பண்ணையில் வேலை செய்தவர்களின் பெயராலே -- அவர்களைக் கேட்காமலேயே -- அவர்களுக்கு அளிக்காமலேயே -- அரசாங்கத்தை ஏமாற்றப் பட்டா போட்டுக் கொடுத்ததாகக் கணக்குக் காட்டினார்கள்; இதுபற்றி யோசித்தோம்; கலைஞரிடம் கலந்து விவாதித்தோம்; அவருடைய ஆணையின் பேரில், யாருடைய பேருக்கு (வேலையாள் பெயரில்) நிலம் எழுதி வைத்தார்களோ அவருக்கே -- பொய்யாக ஆதாரமின்றி எழுதிவைத்திருக்கும் நிலத்தைப் பட்டா செய்து தரப் போகிறோம்!

இப்படி 2,000 ஏக்கர் நிலங்களை ஏழை -- எளியவர்கட்கு விரைவில் பரமக்குடியிலே வழங்கப்படவிருக்கிறது!

தஞ்சை மாவட்டத்திலே கூலி உயர்வு பிரச்சினை எழுந்தது; உரியவர்களுடன் கலந்து பேசி -- சமாதான அடிப்படையில் கூலி நிர்ணயம் செய்தோம்!

குத்தகைப் பாக்கி சம்பந்தமாக, 'பசலிக்கு ஓராண்டிற்குரிய குத்தகைப் பாக்கியை விவசாயி கொடுத்துவிட்டால், மற்ற ஆண்டிற்குரிய பாக்கியைக் கட்டிய தாக அர்த்தம்' என்று அறிவித்து விட்டோம்!

இதுபோன்று கம்யூனிஸ்டுகள் ஆளுகின்ற கேரளத்திலே உண்டா -- வங்காளத்திலே உண்டா?

தமிழ்நாட்டில், அறிஞர் அண்ணா பிறந்த நாளன்று 23,000 ஏக்கர் நிலங்களை 1,57,000 பேருக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறோம்!

எந்த நிலத்திலே ஏழை குடிசை போட்டிருந்தாலும், அந்த நிலத்தை அந்த ஏழைக்கே கொடுத்திருக்கிறோம்!

நான்கூட, 'அடிப்படைத் தீர்வையை 5 தவணை முறையில் கட்டிவிட வேண்டும்' என்று பேசினேன்; உடனே முதலமைச்சர் அவர்கள், 'அதுகூட வேண்டியதில்லை' என்று அறிவித்தார்கள்.

அந்த அளவிற்கு ஏழையின்பால் இரக்கம் கொண்டு இலாபம் -- நட்டம் பாராது விரைந்து காரியங்களைச் செய்கிறோம்; இதைவிட வேறு என்னதான் செய்ய முடியும்? இது போன்று எந்த மாநிலத்திலாவது நடந்திருக்கிறதா?

இவ்வளவு செய்தும், 'விவசாயி சுட்டு வரி -- அழக 'கொடுமை' என்றெல்லாம் அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறார்! ஒரு ஏக்கருக்குப் 2 ஏக்கர் வரி வசூலிப்பதாக உண்மைதானா? கம்யூனிஸ்டுகள் 1,500 ஏக்கர் உடையவர்களையும்-காமராசர் 2000 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களையும் விவசாயிகள் என்கிறார்கள்!

'மீண்டும் போராடுவோம் -- விவசாயிகளோடு செய்துகொண்ட ஒப்பந்தம் போய்விட்டது-போராடுவோம்' என்கிறார் காமராசர்; ஏற்பட்ட ஒப்பந்தம் என்னவென்று காமராசருக்குத் தெரியுமா -- விவரம் தெரிந்தால் சொல்லட்டுமே!

விவசாயிகள் பிரச்சினை பற்றிப் பேசும்போது கம்யூனிஸ்டு கல்யாணசுந்தரம், ஒரு கோரிக்கையை வலியுறுத்தினார்; 'பொய் வழக்குகளை அரசு போட்டிருக்கிறது -- அதையெல்லாம் அரசு திரும்பப்பெற வேண்டும்' என்று; உடனே கலைஞர், 'சரி--திரும்பப் பெற்றுவிடுகிறோம்' என்றார்; பக்கத்தில் இருந்த எனக்கும்--மற்றவர்களுக்கும் தூக்கி வாரிப் போட்டது -- 'என்ன, இப்படி கலைஞர் சொல்லுகிறாரே' என்று; பிறகு கலைஞர் சொன்னார்-- 'பொய் வழக்குப் போட்டிருந்தால்தானே -- போடவில்லையே-- அதனால் அதனை திரும்பப் பெறுவதில் சிரமம் ஏதுமில்லை' என்று!

உண்மையிலேயே, தொழிலாளர் மீது காமராசருக்கு அக்கறை இருந்திருக்குமானால், இரயில்வே தொழிலாளர் போராட்டத்தைப் பற்றி வாய் திறக்காமல் -- பேசாமல் இருந்திருப்பாரா? இதுபற்றி அவர் பேசாமல் இருந்தது ஏன்? பேசினால் காமராசருக்குப் பிரச்சினை வந்துவிடும்!

மத்திய அமைச்சர் சுப்பிரமணியமோ, 'தமிழக அரசைப் பற்றி நிறையப் புகார்கள் வருகின்றன' என்று அலட்டிக்கொள்கிறார்!

ஆனால் மத்திய அரசைப் பற்றிப் புகார்கள் கூறப்பட்டு--அமைச்சர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறார்கள்!

பல கோடி ரூபாய் உணவு தானியங்கள் வாங்கியிருப்பதிலே ஊழல் இருப்பதாகவும், ஒருவித 'மார்க்' இல்லாத எண்ணெயை வாங்கியதாகக் கூறப்படுவதில் பித்தலாட்டம் நடந்திருப்பதாகவும் நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன; அவர்களால் அதுபற்றிப் பதில் சொல்ல முடியவில்லை.

சுப்பிரமணியம் இரும்பு—விவசாய அமைச்சராக இருந்தபோது, எந்தக் கம்பெனியில் பொருள்கள் வாங்கக்கூடாது என்று அரசு ஆணையிட்டதோ அதே கம்பெனியில் -- பியாரிலால் கம்பெனியில் பொருள்களை வாங்குவதற்கு உதவியிருக்கிறார்; குற்றச்சாட்டு சொல்லப்பட்ட அன்று, 'அப்படி ஏதும் இல்லை' என்று சொன்ன சுப்பிரமணியம், அடுத்த நாள், 'தவறுதலாக நடந்துவிட்டது -- மன்னிக்கவும்' என்று பகிரங்கமாக நாடாளுமன்றத்தில் சொன்னார். இப்படிப்பட்டவர்தான் ஊழலைப் பற்றிப் பேசுகிறார்!

காமராசரும் — சுப்பிரமணியமும் ஒன்றாக இருந்தபோது, காங்கிரசு அலுவலகம் சம்பந்தமாக ரூ. 300 வாடகை பெற்று, ரூ. 150-க்கு இரசீது கொடுத்ததாகவும், தேர்தல் நிதி ரூ. 25 இலட்சத்திற்குக் கணக்குக் காட்டவில்லை என்றும் காமராசர் மீது சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டினார்.

அந்தக் களங்கத்தைக் காமராசர் போக்கவே இல்லை; ஆனால் அவர், 'இங்கே கறுப்புப் பணம் நடமாடுகிறது--அந்த அமைச்சர் வீட்டில் கள்ள நோட்டு இருந்தது' என்றெல்லாம் அபாண்டமாகப் பொய் சொல்லுகிறார்!

ஆறு மாதம் படுத்திருந்து எழுந்த பின், 'கவிழ்க்கலாம் -- அழிக்கலாம்' என்றால், நடக்கின்ற காரியமா? அப்படிச் செய்து பார்த்து அதனால் ஏற்படும் விளைவைச் சந்திப்பதற்கு அவர் தயார்தானா?

ஆறு மாதம் புத்தி எங்களுக்குக் கிடையாது; நியாயத்தைச் சொல்லி ஓட்டு கேட்கட்டும்; மாறாக, 'சுடலாம் — சாகடிக்கலாம் என்பது காமராசருக்குக் கைவந்த கலைதான்!

தமிழகச் சட்டமன்றத்தில் அண்ணாவைப் பார்த்து -- அரசு ஆதிக்கத்தை வைத்து மிரட்டுவதுபோல் சுப்பிரமணியம் பேசுகையில், அண்ணா சொன்னார்-- 'அமைச்சர்களே, மிரட்டாதீர்கள்! போராட்டம் பயப்படுவது எங்கள் இயக்கமல்ல! இந்த உயிர் போகப்போவது ஒரு முறை; அது என் நாட்டுக்காக இருக்கட்டும்! உங்கள் வன்முறையை -- நீங்கள் தரும் தொல்லைகளை எதிர்த்து நீந்தத் தயார்' என்றார்; அண்ணாவின் அந்த வார்த்தையைத்தான், கழக நண்பர்கட்கும் -- எதிர்க் கட்சிக்காரர்கட்கும் நினைவூட்டுகிறேன்."

விலைவாசி உயர்வுக்கு யார் காரணம்?

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதில் மத்திய அரசுக்குப் பொறுப்பு உண்டு

எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டுக்குக் கலைஞர் பதில்

வேலூர் செப். 26—

இங்கு செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகட்கும் பதில் சொன்னார்; 'எதிர்க் கட்சிகள் பலமாக இருக்கவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்; ஆனால் இப்போது எதிர்க்கட்சி பலமாக இல்லை; நாங்களாகப் பார்த்து பலத்தை வழங்கினால்தான் உண்டு' என்று ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கூறினார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் மின்சார வசதி கொடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால், தற்போது மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கிறது; இதனால் இந்தத் திட்டம் பாதிக்கப்படுமா?

பதில்:—"பெரும் அளவுக்குப் பாதிப்பு ஏற்படாது; ஓரிரு மாதங்கள் தாமதமாகலாம்."

விலைவாசி உயர்வுப் பிரச்சினை

கேள்வி:—"இடது-வலது கம்யூனிஸ்டுக் கட்சிகள் விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கின்றன; அதேபோன்று காமராசரும், 'வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவில்லையென்றால், 5 இலட்சம் பேருடன் கோட்டைமுன் மறியல் செய்வோம்' என்று கூறியிருக்கிறார்; அது பற்றிய உங்கள் கருத்து என்ன?

பதில்:—"இவைகளெல்லாம் நடக்கும்போது, என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை அரசு முடிவு செய்யும்; அதே நேரத்தில், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும் -- வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய பிரச்சினையைத் தீர்க்கவும் மாநில அளவில் இந்த அரசின் சக்திகளுக்கு ஏற்ப -- அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லாக் காரியங்களையும் நாங்கள் செய்து வருகிறோம்; வேலையில்லாத் திண்டாட்டம் -- விலைவாசி உயர்வு ஆகியவை அண்மையில் இந்தியத் தலைமையமைச்சர் அளித்துள்ள விளக்கங்களையும் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

"விலைவாசி உயர்வுப் பிரச்சினை, மாநில அரசைப் பொறுத்தது -- என்று மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தக் குழுவே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது."

நெல் கொள்முதல் விலை

கேள்வி:—"நெல் கொள்முதல் விலையை உயர்த்த மத்திய அரசை வற்புறுத்துவீர்களா?"

பதில்:—"உயர்த்த வேண்டும் என்று நாம் தெரிவித்திருக்கின்ற யோசனைகளைப் பற்றி அதிகாரபூர்வமாகச் சொல்லாவிட்டாலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்; ஏற்கனவே இருந்த விலைகளை ரூ. 46.48-ஆகவும், ரூ. 48.50-ஆகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது; மாநில அரசின் கருத்தை மத்திய அரசின் கமிஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறது; அதிகாரபூர்வமாகத் தகவல் வரவில்லையே தவிர ஒப்புக்கொண்டதாகத்தான் அர்த்தம்.

அப்படிப்பட்ட நிலையில் தமிழ்நாடு இல்லை

கேள்வி:— "விருந்துக் கட்டுப்பாடு தமிழ்நாட்டில் கொண்டு வரப்படுமா?"

பதில்:—"அப்படிப்பட்ட முடிவு எடுக்கும் அளவுக்குத் தமிழ்நாட்டின் நிலை இல்லை."

வறட்சி நிலைக்கு உதவி

கேள்வி:—"பிற மாநிலங்களில் வறட்சி ஏற்பட்டிருக்கிறதே -- தமிழ்நாட்டிடம் ஏதாவது உதவி கேட்டிருக்கிறார்களா?"

பதில்:—"மற்ற மாநிலங்களும் கேட்கவில்லை -- மத்தியிலிருந்தும் கேட்கப்படவில்லை."

அப்படி ஏதும் இல்லை

கேள்வி:—"கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்கப் போதுமான அளவுக்குப் பங்குத் தொகை சேரவில்லையென்று சொல்லப்படுகிறதே -- பொதுத்துறையில் தொடங்கினால் என்ன?"

பதில்:—"அப்படி ஏதுமில்லை; நீங்கள் சொல்லும் தகவல் சரியாக இருக்குமானால் யோசிக்கலாம்."

உரியநேரத்தில் செயல்படுவோம்

கேள்வி:— "மராட்டியம் -- மத்தியப் பிரதேச மாநிலங்களில் அரிசி ஆலைகள் தேசியமயமாக்கப்பட்டிருப்பதுபோல், தமிழ் நாட்டிலும் சர்க்கரை ஆலைகள் தேசியமயமாக்கப்படுமா?"

பதில்:—"தமிழ்நாடு அரசு நாட்டுடைமைக் கொள்கைக்கு விரோதமானதல்ல; எதையும் படிப்படியாக உரிய நேரத்தில் செய்யும்."

மத்திய அரசின் மொத்த முடிவு அல்ல!

கேள்வி:— "தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசுத் தொழிற்சாலைகளில் எழும் சிக்கல்களை மாநில அரசே தீர்த்துவைக்க மாநில அரசு, மத்திய அரசிடம் கேட்குமா?"

பதில்:— "வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் ஏதுமில்லை; இப்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலை, மத்திய அரசின் மொத்த முடிவு அல்ல; அந்தந்தத் துறைக்கு வரும் அமைச்சர்களைப் பொறுத்த பிரச்சினையாக இருக்கிறது."

கேள்வி:— "இந்த அதிகாரம் தேவை என்று கேட்கப்படுமா?"

பதில்:— "யோசித்து எடுக்கப்பட வேண்டிய முடிவு; மாநிலங்கட்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற பட்டியலில் உங்கள் கேள்வியிலுள்ள இந்தப் பிரச்சினையையும் இணைத்துக் கொள்ளலாம்."

எதிர்க் கட்சிகளின் நிலை

கேள்வி:— "1968-ல் நீங்கள் திருச்சியில் பேசும்போது, ஆட்சியிலிருந்து மூத்த தலைவர்கள் விலகிக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும்' என்று சொன்னீர்களே -- எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பைச் சமாளிக்க......"

பதில்:— "இப்போது எதிர்க் கட்சி பலமாக இருப்பதாகத் தெரியவில்லை; நாங்களாகப் பலத்தை வழங்கினால்தான் உண்டு; அதே நேரத்தில், எதிர்க் கட்சி பலமாக இருக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்."

கேள்வி:—"சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும்போது, 'எதிர்க் கட்சிக்காரர்கள் திசை திருப்ப முயற்சிக்கிறார்கள்; உட்பூசலால்......"

பதில்:—"நீங்கள் கேட்கும் கேள்விக்கு அர்த்தம் புரிகிறது; இது வரையில் அடுக்கடுக்காகக் கேட்டுவந்த தமிழ்நாட்டிலுள்ள வறட்சி நிலை -- விலைவாசி உயர்வுப் பிரச்சினை -- அரசாங்கப் பணிகள்--தொழிலாளர், மாணவர் பிரச்சினைகள் -- கட்சி வளர்ச்சி -- எதிர்க்கட்சிகளைச் சமாளித்தல் ஆகியவைகளில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ள என்னைப் போன்றவர்களுக்கு இந்தப் பிரச்சினைகளில் செலவிட நேரம் இல்லை."

பஞ்சாப்--அரியானா மாநிலங்களில் தமிழகத் தொழில் அமைச்சர் மாதவன்

தொழில்கள் மிகுந்துள்ள பகுதிகளைப் பார்வையிட்டார்

எல்லைப் பகுதியில் இராணுவ அணிவகுப்பு மரியாதை -- இரு மாநில அரசுகளின் சார்பிலும் விருந்துபசாரம்

அமிர்தசரஸ், செப். 26—

பஞ்சாப் மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு தொழில் அமைச்சர் செ. மாதவன், 'வாகா' எல்லைக்குச் சென்றார்; அங்கு எல்லைப் பாதுகாப்புப் படையினர் அளித்த அணிவகுப்பு மரியாதையைப் பார்வையிட்டார்.

பின்னர் இராணுவ வீரர்களுடன் அளவளாவினார்; அவர்களுக்குப் பழங்களும் -- ரொட்டிகளும் வழங்கினார்.

பின்னர், ஜாலியன்வாலாபாக் நினைவுச் சின்னத்தில் அவர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

அமிர்தசரசில் உள்ள சீக்கியர்களின் பொற்கோவிலை அவர் பார்வையிட்டார்; அங்கு அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

செப். 22, 23, 24 ஆகிய நாட்களில் அமைச்சர் செ. மாதவன், பஞ்சாப் -- அரியானா மாநிலங்களில் தொழில்கள் மிகுந்த வட்டாரங்களைப் பார்வையிட்டார்.

தமிழக அரசின் தொழில் வளத் துறை உயர் அதிகாரிகள் சிலரும் அமைச்சருடன் சென்றிருந்தனர்.

பரீதாபாத் எனும் ஊர், டில்லிக்கு அருகே தொழில்கள் நிறைந்த நகரமாகும்; 22-ந் தேதியன்று அமைச்சர் மாதவனும் அவரது குழுவினரும் டிராக்டர்--மோட்டார் சைக்கிள் -- ஸ்கூட்டர் -- மோட்டார் பொருள்கள் -- மின்சாரக் கருவிகள் -- ஒலி பெருக்கிகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் சிறிய--பெரிய தொழிற்சாலைகளைப் பார்வையிட்டனர்.

இதன் முடிவில் பரீதாபாத்தில் இத்தொழில்களை நடத்திவரும் தொழிலதிபர்கள் --நிர்வாகிகள் ஆகியோரைச் சந்தித்து, இது போன்ற தொழில்களை அமைக்கவும், இயக்கிச் செல்லவும் கிடைக்கின்ற வாய்ப்புகள்-- வசதிகள் மற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

சோன்பெட்டில்...

செப். 23-ந் தேதியன்று சோன்பெட்டில் பெரிய சைக்கிள் தொழிற்சாலை ஒன்றை அமைச்சர் பார்வையிட்டார்.

அம்பாலாவில் பல்வகைப்பட்ட நவீன விஞ்ஞானக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை பார்வையிட்டனர்.

இந்தத் தொழிற்சாலையின் பல பிரிவுகளையும் பொறியியல் பட்டம் பெற்றவர்களும்-விஞ்ஞானிகளும் நிர்வகித்து வருகின்றனர்.

தொழில் -- வேளாண்மை -- கல்வித் துறைகளில் பெரும் பயனளிக்கத்தக்க புதிய வகை விஞ்ஞான நுணுக்கக் கருவிகளைத் தயாரித்து வருகின்ற இந்தத் தொழிற்சாலைகளில் இளம் பொறியியலாளர்கட்குச் சிறந்த பயிற்சி அளிக்க வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தொழில் அமைச்சர் கண்டறிந்தார்.

சண்டிகாரில்...

சண்டிகாரில் அரியானா அரசின் குடிசைத் தொழில் பொருள் விற்பனைக்கூடத்தையும் அவர் பார்வையிட்டார்.

செப். 24-ந் தேதி மத்திய விஞ்ஞானக் கருவிகளுக்கான அமைப்பைப் பார்வையிட்டார்.

தொழில்களில் ஏற்பட்டுள்ள புதுமைகளையும் முன்னேற்றத்தையும் சிறு தொழில்களின் வளத்துக்கு எந்தெந்த வகையில் பயன்படுத்தலாம் என்பது குறித்து விவாதித்தார்.

டிராக்டர்களைப் பழுது பார்க்கும் நிலையங்களையும் அவர் பார்வையிட்டார்.

பஞ்சாப் அரசின் தொழில்துறை துணை அமைச்சருடனும்--உயர் அதிகாரிகளுடனும் அமைச்சர் மாதவன் உரையாடினார்.

சிறு தொழில்கள் இப்படிப் பரவலாக உருவாக அம்மாநில அரசு என்னென்ன சலுகைகளையும்--வசதிகளையும் வழங்கி ஊக்குவித்தது என்பது பற்றி அவர்களிடம் கேட்டறிந்தார்.

அன்று பகல் பஞ்சாப் மாநில அரசின் சார்பில் அமைச்சர் மாதவனுக்கு விருந்துபசாரம் நடைபெற்றது; அம்மாநிலத் தொழிலமைச்சர் -- துணை அமைச்சர்--அட்வகேட்-ஜெனரல் -- உயர் அதிகாரிகள் அவ்விருந்துக்கு வந்திருந்தனர்.

வேளாண்மைப் பண்ணையில்...

அன்று பிற்பகல் பாட்டியாலா அருகே உள்ள வேளாண்மைப் பண்ணையை அமைச்சர் மாதவன் பார்வையிட்டார்; மணற்பாங்கான பூமியையும் திருத்தி பயன்தரும் விளைச்சலுக்கு ஏற்றவாறு செய்யப்பட்டிருப்பதைப் பார்த்தார்.

அன்று மாலை அரியானா மாநில உயர் அதிகாரிகளுடன் சிறு தொழில் வளர்ச்சி பற்றி விவாதித்தார்.

அரியானா அரசு உபசாரம்

இரவில், தமிழகத் தொழில் அமைச்சரைக் கவுரவிக்க அரியானா அரசு விருந்து உபசாரம் அளித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

'கருநாடக மாநிலம்'

பெயர் சூட்ட டில்லி இசைவு

புதுடில்லி செப். 27—

மைசூர் மாநிலத்தின் பெயரை 'கருநாடகம்' என மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்கு மத்திய அமைச்சரவை இசைவு தெரிவித்தது.

பெயரை மாற்றுவதற்கான மசோதா ஒன்று நாடாளுமன்றத்தின் அடுத்த கூட்டத் தொடரில் கொண்டுவருவது என்றும் அரசு முடிவு செய்தது.

மாநிலத்தின் பெயரை, 'கர்நாடகா' என மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில அரசை வற்புறுத்தி அண்மையில் தீர்மானம் ஒன்று மைசூர் சட்டமன்றத்தில் நிறைவேறியது நினைவிருக்கலாம்.

அரசியல் சட்டத்தைத் திருத்தாமல் சட்டம் ஒன்றின் மூலம் எந்த மாநிலத்தின் பெயரையோ அல்லது எல்லைகளையோ நாடாளுமன்றம் மாற்ற முடியும்.

அரசியல் சட்டம் 3-வது பிரிவின் கீழ் மசோதா கொண்டுவரப்படும்; மாநில சட்டமன்றத்தின் கருத்தும் அறியப்படும்.

1956-ல் மாநிலங்கள் சீரமைப்பு செய்யப்பட்டதிலிருந்து மைசூர் மாநிலத்தின் பெயரை 'கர்நாடகா' என்று மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை அவ்வப்போது எழுப்பப்பட்டிருக்கிறது; பல்வேறு நிர்ப்பந்தங்கள் காரணமாக அண்மைக் காலம் வரையில் மாநில அரசோ அல்லது சட்டமன்றமோ இது சம்பந்தமாக முடிவு எதையும் எடுக்கவில்லை; மாநிலத்தின் பெயரை மாற்றுவது குறித்து அண்மையில்தான் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேச்சாளர் முகவரி:

விருதை ஜெயராஜ்,
அண்ணா பதிப்பகம்,
54, தபால் ஆபீஸ் தெரு,
விருதுநகர்.

இந்தியாமீது உகாந்தா குற்றச்சாட்டு

ஜாம்பியாவுடன் சேர்ந்து படையெடுப்பு நடத்தப்போவதாகக் கற்பனை

சம்பாலா, செப். 27—

"தான்சானியாவிலிருந்து உகாந்தாமீது புதிய படையெடுப்பு நடத்த இந்தியாவும் -- ஜாம்பியாவும் திட்டமிடுவதாக உகாந்தா இராணுவ அதிகாரி ஒருவர் அபாண்டமாகக் குற்றஞ் சாட்டினார்; இதற்கு இந்தியா கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

"இந்தியா -- ஜாம்பியா ஆகியவற்றின் இராணுவ -- விமானப் படை உதவியுடனும், கொரில்லாக்களுடனும் சேர்ந்து தான்சானியா இராணுவம் உகாந்தாவைத் தாக்க ஏற்பாடு செய்வதற்காகவே இந்தியக் குடியரசுத் தலைவர் தான்சானியாவுக்கும் -- ஜாம்பியாவுக்கும் வருகிறார் என்று நிச்சயமான தகவல் கிடைத்துள்ளது" என்று உகாந்தா இராணுவ அதிகாரி கூறினார்.

"உகாந்தாமீது இராணுவ நடவடிக்கைகள் எடுக்கும் நோக்கத்துடன் இந்தியக் கடற்படையும்--விமானப் படையும் இந்துமாகக் கடலைக் கடந்து வந்து கொண்டிருக்கின்றன" என்று அந்த இராணுவ அதிகாரி கூறினார்.

"இந்தியா நாசகாரிகள் தாருஸ்ஸலாமை நோக்கி வந்து கொண்டிருக்கிறன; இந்தியத் துருப்புகள் உகாந்தாமீது படையெடுக்க வருவதற்குத் தயாராக ஆங்காங்கு இந்துமாக்கடலின் துறைமுகங்களில் இருக்கின்றன" என்று உகாந்தா வானொலி கூறியது.

"இதையெல்லாம் குறித்து உகாந்தா கவலைப்படத் தேவையில்லை; உகாந்தா இராணுவத்தால் நாட்டைப் பாதுகாக்க முடியும்; இந்தியத் துருப்புகள் வழக்கமில்லாத பூமியில் சண்டைபோட வேண்டியிருக்கும்" என்றும் உகாந்தா இராணுவ அதிகாரி மேலும் கூறினார்.

டான்ஜனியாவிலிருந்து உகாண்டாமீது புதிய படையெடுப்புக்கு இந்தியாவும் -- ஜாம்பியாவும் திட்டமிடுவதாக உகாந்தா கூறுவது 'அண்டப்புளுகு -- மிகவும் விஷமத்தனமானது' என்று டில்லியில் இந்திய அதிகாரி ஒருவர் மறுத்தார்.

நகைப்புக்கிடமான இந்தக் குற்றச்சாட்டை மதித்து அதற்கு பதில் சொல்வதே கௌரவக் குறைவு என்று இந்திய அரசு முதலில் நினைத்தது; ஆனால், இந்த அபாண்டக் குற்றச்சாட்டை அப்பாவிகளான ஆப்பிரிக்க மக்களை நம்பும்படி செய்து -- ஏற்கனவே பெருங் கொடுமைக்கு ஆளாகியிருக்கின்ற உகாந்தாவிலுள்ள ஆசியக் குடியினரை மேலும் கொடுமைப் படுத்துவதற்கு முன்னோடியாக உகாந்தா அதிபர் இடி அமீன் இந்தப் புரளியை கிளப்பி விட்டிருக்கலாம் என நினைத்து இந்திய அரசு ஒருகடுமையான மறுப்பை வெளியிட்டது.

தமிழகத்தில் செம்மையான ஆட்சி நடைபெறுகிறது

ஆளுநர் கே. கே. ஷா பாராட்டுரை

வறுமையை விரட்ட முழு முயற்சி மேற்கொண்டுள்ளதாக அறிவிப்பு

பம்பாய், செப். 26—

பம்பாய் வந்திருந்த தமிழக ஆளுநர் திரு. கே. கே. ஷா அவர்கட்கு பம்பாய் -- மாதுங்கா லேபர் கேம்ப் தமிழர்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு திரு. ஏ. வி. டி. இராமசாமி எம்.சி. தலைமை தாங்கினார்.

ஆளுநரைப் பாராட்டி திரு. எஸ். இராமானுசம், இராமன், புலவர் அழகுமுத்து ஆகியோர் பேசினர்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து ஆளுநர் கே. கே. ஷா பேசியதாவது:—

"இங்கு அதிகமாகத் தமிழர்கள் வாழ்கிறீர்கள்; நீங்கள் ஒற்றுமையாக இருந்து இந்த மாநிலத்திற்கு விசுவாசமாக இருக்குமாறு வேண்டுகிறேன்.

தமிழகத்தில் ஏழ்மையை விரட்ட நானும்--தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதியும் முழு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்; ஏழ்மையை விரட்டி அடிக்கும் வரையில் ஓயமாட்டோம்.

தமிழகத்தில் ஆட்சி செம்மையாக நடைபெறுகிறது; அதன் நல்ல செயல்களை விளக்கிச் சொல்ல எனக்கு நேரமில்லை; இன்னொரு தடவை பம்பாய்க்கு வரும்போது தமிழகத்தின் சாதனைகளை பற்றி விளக்குகிறேன்.

இனித் தமிழகத்திலிருந்து வேலை தேடி யாரும் வெளி மாநிலங்களுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படாது; காரணம், அந்த அளவுக்கு தமிழக அரசு செயல்படுகிறது!

ஆளவரையும் திரு. எஸ். தியாகராசன் வரவேற்றுப் பேசினார்; திரு. இராமன் நன்றி கூறினார்.

நடக்க இருப்பவை

28--9--72

திருச்சி

இருமதாவது வட்ட தி. மு. க. கிளை சார்பில் மாலை 6-30 மணிக்கு வெள்ளை வெற்றிலைக்காரத் தெரு மாரியம்மன் கோவில் அருகில்; தலைவர்: டி. எஸ். லோகநாதன்; பேசுவோர்: பி. ஆர். இலட்சுமிகாந்தன், எம். எஸ். வெங்கடாசலம், மு. நடராசன், எம். எஸ் மணி எஸ். ஏ. ஜி. ராபி, வி. கிருஷ்டினமூர்த்தி எம்.எல்.ஏ., ஏ. வி. கிருஷ்டினமூர்த்தி, கே. எல். ஆறுமுகம், கே. கணேசன், எம். கோவிந்தராசு, ஏ. சேவியர், துரைராசு, பி. பியாரே ஜான், டி. எஸ். ஜட்னுலாதீன, டி. ஏ. அமீர் ஜான்.

அந்தியூர்

தி. மு. க.--அண்ணா மன்றம்-- எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் இரவு 8 மணிக்கு தேரடி திடலில்; தலைவர்: பி. ஏ. சாமிநாதன் எம்.பி.; பேசுவோர்: ஜி. என். இராசு எம்.எல்.சி., டாக்டர் பழனியப்பன் எம்.எல்.ஏ., ஈ.எம். நடராசன் எம்.எல்.ஏ., வி. வி. வெங்கடாசலம், கே. எஸ். ஆனந்தன், ஜி. பி. வெங்கிடு எம்.சி. மற்றும் பலர். (மாலை 4-மணிக்கு அண்ணா திருவுருவப் பட ஊர்வலம் புறப்படும்)